68

A

உ

பரமபதிதுணை.

ஏரல்மாநகர்

சேர்மன் அருணாசலசுவாமிகள்

சித்துக்காண்டம்.

566
3-12

இஃது

பெருநாழி யென்ற பெயர்வழங்கும் பழசைமாநகரில் வசிக்கும்

மகா-ா-ா-ஸ்ரீ வே. ஆறுமுகநாடாரவர்கள் குமாரர்

குமாரய்யநாடார் இயற்றியது.

தூத்துக்குடியில் வசித்துவரும் அருப்புக்கோட்டை

மகா-ா-ா-ஸ்ரீ மேகன் வடி முத்துக்கருப்பநாடாரவர்கள் குமாரர்

சிவநாராயணநாடாரவர்கள்

விருப்பத்தின்படி

13

தூத்துக்குடி கமிஷன் ஏஜண்டு

மகா-ா-ா-ஸ்ரீ ப. ரூ. மாயாண்டி நாடாரவர்கள்

பொருளுதவியால் வெளியிடப்பட்டது.

N. சிவகுருநாத பிள்ளையால்,

தூத்துக்குடி

சைவப்பிரகாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

---

19 2

0-,85M KVS,E
N12.
170612

பரமபதிதுணை

ஏறன்மாநகர்

சேர்மன் அருணாசலசுவாமிகள்

சித்துக்காண்டம்.

568
3-12

இஃது

பெருநாழியென்ற பெயர்வழங்கும் பழசைமாநகரில் வசிக்கும்

மகா-௱-௱-ஸ்ரீ வே. ஆறுமுகநாடாரவர்கள் குமாரர்

குமாரய்யநாடார் இயற்றியது.

தூத்துக்குடியில் வசித்துவரும் அருப்புக்கோட்டை

மகா-௱-௱-ஸ்ரீ மேகன் வ டி. முத்துக்கருப்பநாடாரவர்கள் குமாரர்

சிவநாராயணநாடாரவர்கள்

விருப்பத்தின்படி

தூத்துக்குடி கமிஷன் ஏஜண்டு

மகா-௱-௱ ஸ்ரீ ப. ரூம. மாயாண்டிநாடாரவர்கள்

பொருளுதவியால் வெளியிடப்பட்டது.

N. சிவகுருநாத பிள்ளையால்

தூத்துக்குடி

சைவப்பிரகாச அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

1912.

சாற்றுக்கவிகள்.

இராமநாதபுரம் சமஸ்தானம் பொந்தப்பொளி பெருநாழியில்
வசிக்கும் பாளையகாரர் மகா-ள-ள-ஸ்ரீ
ந. விஜயராமலிங்கஞ்சேருவைகாரரவர்கள் இயற்றியது.

சந்த விருத்தம்.

மணிவிளைந்திடுமேறன்மாநகர் மகிமைசெல்வவிராமய்யா
மன்னவன்றவமருவுமங்களமைந்தனிந்திரபோகமால்
தனிவிளைந்திடுதாமந்தரு தாமெனத்தன்மகோசரம்
தழுவியெட்டுளவக்கரத்துள தற்பரப்பிரமந்தனை
பணிவிளைந்தருள்சேர்மனென்றருணாசலப்பெயர்பரவிய
பரமஞானிசமாதிசித்தியல் பண்புபாபிரபந்தமே
அணிவிளைந்தமரமாருக்ககிலத்துளர்க்கமுதுய்த்தனன்
அதிதிராவிடகுமரய்யாகுண வற்புதக்கவியாள்வலோன்.

பெருநாழி மகா-ள-ள-ஸ்ரீ முத்துக்கருப்பநாடாரவர்காள் குமாரர்
மகா-ள-ள-ஸ்ரீ
சோதிடம். முருகேசபாண்டியரவர்கள் இயற்றியது.

நத்தீனுமணிக்குவைவானிருந்துதிர்ந்த
நட்சேத்திரமெனத்திகழ்செய்மாடகூடஞ்
சித்திரவாடரங்குபலபெருகுமேறற்
சேர்மனருணாசலமாந்தெய்வஞ்செய்த
சித்தானகவிமாலைமதுரமாகச்
செப்பினனன்னூல்பன்னூலுந்தேர்ந்து
எத்தினமும்பழசைநகர்வாசந்தங்கும்
வந்தல்குமரயகவிஞனென்போன்மாதோ.

சாற்றுக்கவிகள்.

மகா-ள-ள-ஸ்ரீ வெள்ளையப்புலவரவர்கள் குமாரர்
பாரதப்பிரசங்கம் மகா-ள-ள-ஸ்ரீ

கந்தசாமிப்புலவரவர்கள் இயற்றியது.

பார்மனரெலாம்பரவுமேறல்பதியாதிபதி
　　பாணமலரோனிவனெனப்
பாவையனையார்கள்மடலேலவரையிராமயப்
　　பராமயவுளத்தனருள்சேய்
சேர்மனருணாசலவிவேகிவெளியாகி
　　யுருவாகியொளிவாகியதிகத்
தேவர்மறையோர்பரமஞானிமுனிவோர்களடி
　　தேடமுடியாதநெடியோன்
ஆர்மனடியேமனதுநாடிவடிமோனநிலை
　　யாகிமனவாசினையமறுத்
தானமசமாதியுறலாகிமனுவாழ்கவிளை
　　யாடிவருசித்தனையே
சீர்மணமருதகுணவாறுமுகவேளருள்
　　சிகாமணியதானபுதல்வன்
செய்யதமிழ்வல்லவனெனுங்குமரய்யாகுரிசில
　　செய்தபிரபந்தமிதுவே.

பெருகாழி உட்கடை முத்துச்செல்லையாபுரம் மகா-ள-ள-ஸ்ரீ

சங்குமுத்துப்பிள்ளையவர்கள் இயற்றியது.

குப்புசித்துமீட்டுமிழ்ந்தும்வாரிமீக்கட்
　　குலவியகண்படைகொண்டுங்கோளீற்றீய்த்தும்
துப்புசித்துக்குயிற்றுவபோற்றிதித்துமாய்த்துந்
　　தொல்லுயிர்பல்லவுநிறைந்துதுலங்குமாயோன்
செப்புசுத்துமயக்கடவுட்கன்பனேறற்
　　சேர்மனருணாசலவேடெய்வீகத்தின்
ஒப்புசித்துப்பிரபந்தம்பழனசையூரி
　　னுரைசெய்குமரயப்புலவனுரைத்திட்டானே.

சாற்றுக்கவிகள்.

பெருநாழி சோதிடம் மகா-ள-ள-ஸ்ரீ நல்லகண்ணுப்பிள்ளையவர்கள்
குமாரர் மகா-ள-ள-ஸ்ரீ

சிவஞானம்பிள்ளையவர்கள் இயற்றியது.

விற்காமனெனத்திகழ்வோனுவணைமாநகர்வளர்வோன்
        பீமேனன்வம்சத்
திற்காமலினசக்கரத்தோன்மாயாண்டிவள்ளலணி
        சேர்மன்னூலாம்
சொற்காமன்மாநிதியந்தரமகிழ்ந்துசுவையுடன்கற்பனைபொ
        ருளின்றொடக்காமின்ப
மொற்காமற்காவியஞ்செய்தான்குமரய்க்கவிஞ
        னுவக்கமாதோ.

பெருநாழி மகா-ள-ள-ஸ்ரீ இருளப்பஆச்சாரியாரவர்கள் குமாரர்
மகா-ள-ள-ஸ்ரீ

சண்முக ஆச்சாரியாரவர்கள் இயற்றியது.

வெண்பா.

வஞ்சரிதயங்கள்புகாவள்ளலெனுஞ்சேர்மனவர்
செஞ்சரிதைகாவியமாய்ச்செப்பினன்—குஞ்சரிக்கோன்
அம்புயத்தாள்போற்றிநம்மாறுமுகமாவருளும்
நம்பிகுமரய்யனெனுநாமன்.

பெருநாழி, மு. முத்துச்சுடலை பாடியது.

சக்கரமுன்கடைந்தமரர்க்கமுதமீந்த
        சதுர்முகனின்தந்தையெனத்தரணிமாந்தர்
தொக்கனுறும்பிணியகலக்கருணையோடும்
        துய்யதிருவேறனகரதனில்வாழும்
மிக்கபுகழ்ச்சான்றோர்கள்மரபிற்றோன்றி
        மேன்மைபெறுஞ்சேர்மனவர்சரிதந்தன்னை
முக்கனிதேன்போன்றகவிப்பாவிற்சொன்னன்
        முன்னூல்களாய்ந்தகுமரயனுமேலோன்.

படல அட்டவணை.

தெய்வ வாழ்த்து.
1. உற்பவப்படலம்.
2 உத்தியோகப்படலம்.
3. சமாதிப்படலம்.
4. அற்புதங்காட்டுப்படலம்.
5. வசியபேத விக்கினப்படவம்.
6. மகத்துவ விளக்கப்படலம்
7. அலகையகற்றுபடலம்.

உ

பராமபதிதுணை.

ஏறன்மாநகர்

சேர்மன் அருணாசலசுவாமிகள்

சித்துக்காண்டம்.

தெய்வ வாழ்த்து.

விநாயகர் காப்பு.—அறுசீரடியாசிரிய விருத்தம்.

திருமணியாகம்வைத்த செங்கணனருளிலேவர்
பொருமணியாகவத்திற் போக்கினகதையைத்தீட்டுங்
குருமணியாகமர்த்தேவிருகழல்கொண்டுசித்திற்
பெருமணியாகவந்தசேர்மனின்பெற்றிசொல்வாம். (1)

சேர்மன் அருணாசலசுவாமிகள் துதி.

எண்சீரடியாசிரிய விருத்தம்.

பேரருணாசலமதுவேயின்றிப்பாடிப்
பெறுமடியாருமும்பர்களும்பிறரும்போற்ற
வோருணாசலமெனவேநின்றநாத
னுறித்தயிருண்போனிவர்களருளைத்தாங்கிப்
பாரருணாசலயமிகச்செய்யுநோயைப்
பற்றறுக்கமெஞ்ஞானமருந்தாய்வந்த
சீரருணாசலகுருவினுபயபாதச்
செம்பதுமமெப்பொழுதுஞ்சிர்திப்போமே, (2)

திருமால் துதி.

தேரினினின் றுமேனாட்டியவர்குறித்துநின்ற
போரினினின் றுங்கம்பப்பொறுப்பிடைநின் றும்வாரி
நீரினினின் றும்பாதம்பிணைத்தவர்தம்மையாய
ஊரினினின் றுங்காத்தவொருவனைவணக்கஞ்செய்வாம். (3)

கலைமகள் துதி.

பன்னடைநூல்களெல்லாம்பாரெலாம்பரவிப்பொங்கி
நன்னடைபயின்றுநிற்கநல்கியகருணைவல்லித்
துன்னடைத்தவளக்கஞ்சம்வேற்றுமைதோன்றாவண்ணம்
மென்னடையென்னவைகும்விமலைதாள்வணக்கஞ்செய்வாம். (4)

நூல் வரலாறு.

உரியரிந்நூலுக்கானொருவக்தினிதிருக்குமேறல்
அரிகிருட்டிணப்பேர்வாய்ந்தவண்ணலேசொன்னசிந்தாய்
தெரியுநூற்கருத்தையாய்ந்தேதெளிவுடன்விரிவுதோன்றப்
பரிவுடன்விருத்தபாவாய்ப்பாடினேன்யானுமன்னோ. (5)

நூற் பயன்.

பிடித்திடும்பேயுநோயுஞ்சேர்மனின்பெயரைநாவா
னொடித்திடப்பேருமென்பார்நோக்குவார்க்கரியசித்தாய்
நடித்திடுமவர்தன்னாமகன்குறவிளக்குமிந்நூற்
படித்தவர்கேட்டோரெய்தும்பயனையார்பகரவல்லார். (6)

அவையடக்கம்.

திரைக்கடற்கெதிராயாவின்சிறுதடம்படிந்தநீர்போ
லுரைக்கடற்புலவர்முன்னேயுரைத்துளேன்சேர்மனென்னுந்
துரைக்கடன்செலுத்திஞானத்துறைக்கடலமைந்துநோயாம்
புரைக்கடன்மருந்தாய்நின்றபுண்ணியர்சரிதந்தன்னை. (7)

உறுபொருட்கொள்கைதேறாதுரைவழுவமையக்கூறுஞ்
சிறுவர்தமமொழிகட்காகத்திருவுளமகிழுமான்றோர்
மறுவிலாச்சேர்மன்காதைதவைததசொல்லவையாமென்ன
முறுவல்செய்திடுவர்சிறாரென்பதான்மொழிபலானேன். (8

இந்நூலுக்கு உபகாரி.

இந்தணைவேணிகாதற்கினியபாலீயத்தேனு
வந்தணைநகரிற்சான்றோர்மரபுளான்ராமசாமி
மூந்தணைதவத்தில்வாயத்தோன்முன்வருவோர்க்குநன்மை
தந்தணைபுகழ்மாயாண்டிதந்ததிந்நூற்குச்செல்வம். (9)

க. உற்பவப்படலம்.

முத்தினிற்சிறந்தவாரிமுழுப்பொருணல்கவாசை
பத்தினுஞ்சிறக்கவாரம்பணிதவழ்பொதியமீய
வித்தினிற்சிறந்தசெங்கெல்விளைவுடன்ஞானபத்திச்
சித்தினிற்சிறந்ததிந்தத்திருவளர்பாண்டிநாடு. (1)

மருவினைதுளவோனுள்ளமகிழ்வுறவும்பரேத்தக்
கருவினையுயிர்கடம்மைக்கருணையோடளித்தமாது
வுருவினைகாட்சிகண்டங்குவந்திடப்பரமயோகி
திருவிளையாடல்செய்தசெயலுடைப்பாண்டிநாடு. (2)

தாவருமன்புதூண்டத்தாய்பிதாசுதனென்றேது
மூவருமரசுசெய்துமுதிர்பெருங்கருணைகாட்டிப்
பூவருமடியாருள்ளம்புளகிதங்கொள்ளவைகித்
தேவருமினிதுபோற்றத்திகழ்திருப்பாண்டிநாடு. (3)

எழுங்கடையுகங்கள்காண்போனிலங்கையின்றலைமைகாணச்
செழுந்தழல்கடலிற்காணச்சேவடிவருணன்காண
வழங்கியகருணையம்பான்வானரச்சேனையோடும்
அழுங்கியமயிலைமீட்பானமர்ந்ததிப்பாண்டிநாடு. (4)

நாகத்திலுதித்துத்தோன்றுநல்லுயிர்காத்துத்துன்ப
மேகத்திணறத்தைப்பாலித்தியாவருவிளையுமாறுப்
போகத்திற்களிக்கச்செய்யும்பொருநையாறெம்பிரானின்
பாகத்திலிருந்தாளென்னப்பாயுநற்பாண்டிநாடு. (5)

திமிழ்விடைக்கலுழனூருந்தேவரும்பிறருமன்பா
யமிழ்தெனச்செவியிலேற்கவடியவர்பாடுப்பாட
லிமிழ்நலமுளதாய்ப்பாடையாவுக்குமேற்றமான
தமிழ்நலம்பெருகுஞ்சீர்த்தித்தகைவுள்பாண்டிநாடு. (6)

பன்னலந்திகழ்நாட்டிற்பனைபலாத்தென்னைதாழை
கன்னலங்கதலிதேமாக்கமுகிவைப்பெருக்கிலோங்கி
யின்னலங்ககலயாருமாடுவார்வினைகளெல்லாந்
துன்னலமென்னவோடுந்துகளிலாப்பொருநையோர்பால். (7)

வேறு.

தேறன்மாவருந்தியின்னிசைபாடத்தேவர்நீராடவந்திளைப்பை
யாறன்மாநலமென்றண்ணிழலிருப்பவவர்மொழிமொழிகளைக்கிளிக
கூறன்மாகல்விப்பயிலிடங்கடுப்பக்குயிலினங்கூவுறுஞ்சோலை [ள்
யேறன்மாநகரொன்றுளவஃதுலகிலிந்திரைக்கிருப்பிடம்போன்று()

புண்ணியநதிபாய்ந்திடவிளைவிளைவாற்புணரிசென்றுலவியகப்பற்,
றிண்ணியநிதியாற்பனைபலதருக்கள்செழிப்புடன்றந்திடும்பொரு
ளால்,விண்ணியனகருமியக்கர்கோன்பதியும்வெள்குறப்பலவளமலர்
ந்து, எண்ணியபோகம்நுகர்வதற்கேற்கவிருந்ததிவ்வேறன்மாநகரம்

பூவெலாம்வாவிப்புதட்புனலளிக்கப்புள்ளெலாம்நுகர்ந்திடுங்கனி
காவெலாம்நல்கவினியநற்பாகைக்கற்பகமீய்ந்திடவறிஞர் [யைக்
நாவெலாமமலபோதமேவிளைக்கஞாலமேலுயர்வினைகவிஞர் [ர்.
பாவெலாம்விளக்கச்சிறந்திடுநகரின்பண்பையாருரைத்திடவல்லா

வெயில்புகுந்துலவாச்சோலைகடோறு மென்சிறைவிரித்தினிதாடி
மயில்புகுந்துலவுமுசனின்றுடுமடந்தையர்வரிநெடும்விழியாம்
அயில்புகுந்துலவும்நோக்குகாளையர்நெஞ்சவர்மனமன்னவராடற்
பயில்புகுந்துலவுஞ்சாகரத்தென்றல்பரிமளத்துடனுலவிடுமே.(11)

நூலெலாம்புகழ்மாநதிப்பிரிவினவாய் நுவலரும்புனல்வளங்கொண்
காலெலாந்தவளச்சங்கினந்தவழுங்கனகநேர்நெல்விளைவயலிற் [ட
சாலெலாமலரின்றேன்கசிவெடுக்குந்தண்புனல்வாவியிற்றிரியுஞ்
சேலெலாங்கமழுமாதர்கண்மெய்யிற்றிகழ்ந்திடுநறுமணக்கலவை ()

வானுலாமகளிர்பூம்புனலாடவருபவரோறலிற்புகுந்தே, தேனுலா
மொழியார்பாடுதேவாரச்சிறப்பினைக்கேட்டினிதேகி, கானுலாந்
தொடையன்மகிழ்னர்முன்பாடக்கனியிசைநாரதன்றெளிந்தே,
மானுலாங்கரத்தெம்மண்ணலைப்பாடுவாணனைவியந்துபாடுவனே. ()

கடையெனச்சொல்வதொழிமின்களென்னக்கடன்மலைநாடுகானக
லடைபலபொருளின்றொகுதியாலுயருமாவணவீதியினழகும் [ரி
படைவிழிமாதராடவருநிறையும்பத்திகொண்மாளிகைச்சிறப்பும்
நடைபெறுகல்விச்சாலையின்செறிவுநன்கமைந்திருந்ததிவ்வேறல்)

திருவுறுமந்தத்திருநகரதனிற் றென்னவர்குலந்தலையெடுப்ப, வரு
புகழ்ச் சான்றோர்மரபினிலொருவன் வண்மையுமுண்மையுமுடை
யோன், தருமமேயுருவாயமைந்திடுமெமதுசற்குருவந்தினிதுதிக்
கப், பெருமைபெற்றுயர்ந்தோன்வாழ்வினிற்சிறந்தோன்பேர்கிலாக்
குணனிலையுடையான். (15)

வேறு.

பராமயமதானபொருள்பத்தியினிதெய்த
வராமணியெனத்திகழ்வோடாங்கிலரோதந்த
கிராமவதிகாரமுறைகேண்மையொடுசெய்யும்
இராமயநாடானெனவேவேய்ந்ததிருநாமன் (16)

தூயவளமோங்குசிறுதக்தொண்டநலூர்மிஞ்சுங்
காயல்முதலானகிராமத்தலைமைகாண்போன்
எயதோர்புதுக்குடியிவ்வேறனகர்தன்னில்
ஆயபெருவாழ்வுதரவன்புடனிருப்போன் (17)

பொங்கியுயர்நன்னிதிபொருந்தியினிதோங்க
வங்கமலையாகுமெனமாளிகைவயங்க
அங்கிலதேயத்தரசரன்புடன்மதிக்கத்
திங்களெனமங்களகுணச்செயல்சிறக்க. (18)

பற்பலவிதத்துடையபாடைநனிதேறக்
கற்பவருவந்துபயில்காட்சியுறுசாலை
அற்புதமிகுந்ததிருநந்தவனமாதிப்
பொற்புடனமைத்தினியவாழ்வுபெறுபூமான். (19)

தாவுபரிபொற்சிவிகையுள்ளவொருதக்கோன்
நாவுதவராமொழியினன்மையைவிளைப்போன்
ஏவுவிழியார்மதனனென்னவருமெய்யன்
பூவுலகெலாந்தவழ்புகழ்க்கடலையன்னான். (20)

உத்தரதிசைக்கணிந்துள்ளவனையொப்பாய்
இத்தரணியின்றெருதிருப்போனிவனென்ன
வைத்தநிதியோடுமிளமங்கையொடுமின்பப்
புத்திரனைநாடியருள்பூண்டுவருநாளில் (21)

வேறு.

பழிகாட்டச்சேர்பிணியர்வருந்திச்செய்த
பாக்கியமோசொல்லவொணாக்கருணைவெள்ளம்
விழிகாட்டமாலரனுமயனுங்கூடி
வேதவிதிநீதிநிலைதெய்வச்சித்தி
வழிகாட்டப்பூவுலகிலனுப்பவந்த
வான்பொருளோதெய்வமெனவாய்ந்தமேலோர்
மொழிகாட்டயாவர்களுமொப்புஞான
முதிர்பயனோயாரறிவாரஃதேயன்று (22)

இருந்தவத்தியினங்கள்பெயர்ந்தெழுந்ததென்ன
வெதிர்ந்தகருங்கழலரக்கருயிர்கள்வானிற்
பொருந்தவத்தியுகிரவடிவாளிதொட்டும்
பொன்னுலகோரின்னலினைத்தீர்த்துமேனாட்
டிருந்தவத்திகடைந்தமுதமவர்க்கேயீய்ந்தோன்
சேவடியைமறவாதுவருந்திச்செய்த
அருந்தவத்திலிராமயநாடனுக்கோர்சேயா
யவனியெலாம்புகழ்ந்திடவந்துதித்ததம்மா. (23)

கோத்தமலர்த்தார்புனையுமாதர்தங்கள்
குரவையுடன்வாழ்த்தொலியுமெழுந்துபொங்கப்
பூத்தமலர்கொம்பனையகோதையின்று
புத்திரனைப்பின்றெடுத்தாளென்னக்கேட்டு
ஏத்தரியபேருவகைப்பெருக்கிலாகி
யெவ்வுயிருந்தன்னுதரத்திருத்திமேனாள்
காத்தபிரானருளெனமாகதிநீராடிக்
கண்ணுற்றான்கான்முளையைமனையிற்சென்றே (24)

அறுபதினாயிரவருடந்தவஞ்செய்தெங்க
ளாதியரிராமனைமுன்பெற்றகாதற்
பெறுபதின்றேர்மன்னனிவனாகுமென்னப்
பேரானகிளைபுவப்பப்பொங்குசெந்தே
னுறுபதுமத்திருந்தவளைப்போன்றளீன்ற
வொப்பிலாத்திருமகனைநோக்கிநோக்கி
நறுமலர்த்தார்புனையரசர்குலத்துவள்ள
னயனங்கள்களித்துவகைக்கடலுளானான் (25)

தேன்வழங்கத்திருத்துளவோனுண்டமண்ணாஞ்
செழுமருந்தேநன்மருந்திங்காகுமென்ன
வான்வழங்கப்பொங்குபுவியோர்நோய்தீர
வழங்குகொடையாளியெனுந்தெய்வந்தன்னைத்
தான்வழங்கத்திருந்துதவம்புரிந்தவேந்தல்
தமர்நகரார்யாவருக்குமினியசித்தாங்
கான்வழங்கவருமகவுமினிக்குமென்னக்
காட்டுதல்போற்சர்க்கரையும்வழங்கினானே. (26)

சீர்கலிநாலாயிரத்தோடொன்பானூறு
திகழெண்புத்தொன்றில்விசுவருடம்பொங்கும்
ஆர்கலிசூழ்பூவுதித்தமதலைக்கன்பா
யவர்பேரரானவருணாசலம்பாம்
பேர்கலிதீர்க்கிடவைத்தேயரியதானம்
பேணிமறையோர்களுக்குமிடியர்யார்க்கும்
நேர்கலிதீர்ந்திடும்படியாய்நிதிகணல்கி
நேயமுடன்யாவர்களுமெச்சவாழ்ந்தான். (27)

சலப்பூத்த தரளமணிகளைக்கள் பூட்டிக்
தார்பூத்த குஞ்சியுடன் றவழ்ந்து கூறும்
நலப்பூத்த மழலைமொழி செவியிலேற்றும்
நகைபூத்த திருமுகத்தின் காட்சிகண்டும்
அலம்பூத்த செங்கையினன் றம்பியாயெம்
மகம்பூத்த சோதியினை வளர்த்தாரென்னக்
கலம்பூத்த கொங்கைமடமானுந் தானுங்
களிபூத்து வளர்ந்துவருங் காலந்தன்னில் (28)

வேறு.

உண்மையிற்றவராமாந்தர்களுறையுமு முறிமாநகரெனும்பதியிற், றிண்மையிற்றவராமன்னவர்குலத்தாள்சிவனணைந்தம்மனென்றேதாம், பெண்மையிற்றவராடிருமடியிடத்துமபேர்ந்துவந்திரப்பவர்க்கீயும், வண்மையிற்றவரான்றேருள்வரையிடத்துமலரடிதோய்வுறவளர்வார். (29)

சீதரன்மலராடிருநடம்புரியுஞ்செல்வமாங்கடலிடைவளருஞ்
சோதிடமாமணிபோற்றன்றிருமரபுந்தூய்மையுவாய்மையுவளர
நீதியும்புகழுங்கருணையுநெறியுநிமலமெய்ச்சித்தியும்வளர
ஆதியானருளாலென்னையாளுடையவையனுஞ்சேர்மனுவளர்ந்தார்.

ஆகமநெறிசொன்மந்திரம்நடக்கவமலமெய்ச்சித்துமேநடக்க
வாகுடன்றெருளினடந்தினிதோடிவளர்ந்திடும்பருவமோரைந்திற்
சேகரக்கல்விச்சாலையிலெல்ப்திச்சிறுவர்களுடனறுந்தேனின்
பாகுறுதமிழோடாங்கிலக்கலையுமபயின்றனர்முறைமுறையாக (31)

முதனிலைச்சீடணியல்பினிற்கலையாய்முறையுடனுதியூழ்விதியே
யுதவியகுணமுநீதியுமதியுமொழுக்கமும்பிறவுளநலனும்
பதிவுறுகரும்பினுறுரதமெனவும்பாலினிலுறுசுவையெனவும்
இதமுடன்பொருந்தப்படித்தனர்கலைகளிதயமாமலரினிலிருக்க ()

வந்தனைக்கலைகள்யாவையும்பயின்றுவழுத்துறவிஞ்சையிற்றமது
சிந்தனையனுகவன்னவையாவுந்தெளிவுடன்கற்றறைமையாளுந்
கந்தனையளித்தசோதியுமரியுங்கருணைசெய்யூழ்வினைத்தொடர்டால்
நிந்தனையுடையவிடப்பிணியகற்றநினைத்தனர்கின்மலனடியார். (33)

பொய்யிலாவுளத்தோரெத்தொழிலைப்புரியினுமன்னதுதவிரா
மெய்ம்மையதாகுமெனமனுநாலோர்மேலுரைசரதமேயாகத்
துய்யனும்பரமனருட்பிரவாகந்துலங்கியமந்திரவலியால்
வையகமாந்தர்விடப்பிணியாவுமாறிடநன்மையேசெய்வார், (34)

இன்னவாறிவருமொழுகிடுங்காலையிருபதென்றுரைத்திடுவய துள், அன்னைபொன்னுலகிலடைந்திடபெரிதாமவலமுமனதிடை தந்தே ன்ற, சொன்னயமுடையகலவியின்றுணிபாற்றொழிலைத்துமெ ய்நிலையலவெனனப், பின்னவர்தமக்குமுறுதிகளசொலவிப்பேரின் பமாகவீற்றிருந்தார். (35)

ஆக திருவிருத்தம் 35, தெய்வவாழ்த்து உள்பட 44.

உ. உத்தியோகப்படலம்.

தாய்தவிர்ந்திடலாலெய்தியதுன்பந்தனைக்கண்டுநீக்கியதாதை, வாய்மையின்படியேமனுநெறி முறைபாய்வாழ்வுளதன்றிருமபோ ர், ஏய்ந்திடச்செய்தநகரதிகாரமெனுந்தொழினலமுடனேநிச்,செ ய்மையோடண்மையின்றி நன்னடுவாய்ச் செலுத்தினர் சோழனே யென்ன. (1)

வாய்த்திடுநகரத்தலைமைபெற்றிடினு வந்தடைவோர்களினுடலை
தேய்த்திடுமபிணிகளானவை யகலத்தீர்த்தநற்புனிதமாயவிப்பர்
மாய்த்திடுங்கொடியவரவுகள்தீண்டிவல்விடமேறினுமருளைக்
தோய்த்திடும்பரமமந்திரவலியாற்றுகளறவிறங்கச்செய்திடுவார் (2)

வீடியமணிதன்றனையுமேமறையால்விடந்தலைக்கேறியேயுடலி [றிற்
லோடியதிறக்கிப்பிழைத்திடச்செய்வாருலந்திடத்தீண்டிமுன்புற்
கூடியவரவைவரவழைத்திடுவார் கோளராத்தீண்டுசேய்பிழைக்கப்
பாடியகமபனுவலமையையேற்பாபரமராஞ்சித்தனையொப்பார். ()

விடநிகர்விழியார்விடப்பிணியகற்றமேவிடின்மறைவிடத்திருக்கத்
திடமுடனுரைத்துமந்திரமோதித்திருக்கணுனேக்கிடாதேவற்
கடனமுறைநின்றூர்தங்களாணீரைக்கருணையோடளிப்பரேயானு
லடற்புலனடக்கிநின்றவர்பெருமையாவரேயுரைத்திடவல்லார். (4)

புன்மையைவிளக்குந்தீயவரிடத்திற்பொருந்துபகார மாயார்
க்கும், நன்மையைவிளக்குந்தூயவரிடத்தி னுடைநற்பொருளெனும்
பொதுமை, யின்மையையுடையாரடையினுமவர்களேற்றிடும்பிணி
பெயர்ந்தகலுந், நன்மையைச்செய்தேநிதிசிலவளித்துச்சாற்றுமப்
பொருணிலைதெரிப்பார். (5)

தன்னகருணையுமாந் தருக்கன்றித் தனித்தனி யண்மைசெய்
மையவாய், மன்னியநகராவந்தழைத்திடிஇவருந்துமால்யானையை
க்காக்க, விண்ணருட்கடலாய்ச்சென்றிடுமாலபோலெய்தியங்கவரவ
ர்க்கணுகும், பன்னகவிடமோடருமபிணியாவும்பற்றறச்செய்வார்ந
ற்றயவாய். (6)

திருநகர்த்தலைமை பூண்டிடுஞ் செயலாற்றேடி வந்தடைபவர்
மொழியுந், திருவழகசெவையுமோர்ந்துநன்மொழியாய்த்துலையிடு
நாவெனப்பிறழா, திருவருமொப்பத்தீர்ப்பாவந்திரக்குமெளியவர்
முகக்குறிப்பறிந்து, கருமுகிலெனவேவழங்குவரெய்துங்கானடை
ப்பிணிகளுந்தவிர்ப்பார். (7)

மைப்படுங்கடலோமரகதக் கொழுந்தோவடிவெனத்திகழ்ந்தி
டும்பெருமான், செய்ப்படுங்கமலத்தாளினிலுதித்துத்தீர்த்ததுவி
னையெலாஞ்சேர்மன், கைப்படுந்தகைமைபெற்றதாற்புவியிற்கடுவி
டப்பிணியெலாந்தவிர்க்கு, மெய்ப்படும்பொருளாய்நின்றதுநன்னீ
ர்மேன்மையோர்ச்சேர்வுழியிவையாம். (8)

சொல்லியகல்விபொருளதிகாரந் தொடர்ச்சியாய்நன்மையை
விளக்கப்,புல்லியபோதும்நகரினில்யார்க்கும்பொதுமையாயெவர்க
ளுமொப்ப, நல்லியல்பானவுத்தியோகத்தைநடத்திமுன்னனுமனே
கொணர்ந்த, வலலியலமிர்தசஞ்சீவியேயென்னவையகங்களித்திட
விருந்தார். (9)

எட்டெழுத்தானமந்திரமதனால்யாவையுமெய்தலாமென்னச்
சிட்டர்கள்மொழிந்தமொழிப்படிகமலத்திருமகளுயகனுமம்
இட்டமதாகவமலமெய்ப்போதவறிவுடனுனினிலிலங்க
விட்டவாசையராயெகின்பழமென்னவிளங்கினரெமதுசற்குருவே.

மண்கொளாநிதியு மதிகொளாக்குணமு மனுகொளாநீதியும்பார்ப்போர், கண்கொளாவனப்புங் கலைகொளாவறிவுங் கடல்கொளாக்கருணையு மதியோர், எண்கொளாப்புகழு மிகல்கொளாவியல்பு மிசைகொளாவொழுக்கமுமிருந்தும், பெண்கொளாத்தன்மை யென்கொலோவென்னப் பேசுவாரிவ்வுலகுள்ளோர். (11)

வேறு.

யாதெனத்தெரிதறேற்று மின்னுயிர்கவருங்காலன்
தூதெனவறிஞர்சொன்னகுறிப்பினேதணிவுஞான
மீதெனக்கொண்டபோத விளக்கமோவிரிந்தபாரின்
மாதெனததோன்றுவோர்பால் வைத்திலர்மனத்தையென்ப (12)

வேளைநேர் படிவம்பெற்றும் மெய்த்திருவனையமேவுற்றும்
காளையாம்பருவமுற்றுங் கடக்கருங்காமனின்ப
வாளரிககண்ணார்தங்கண் மயல்வலைகடந்துநின்ற
கோளரியென்னலானார் குங்குமக்கடகத்தோளார். (13)

கள்ளமாய்நின்றசிந்தைக் கன்னியர்தமைநோக்காத
வுள்ளமாய்ப்பிணியின்வேலை யுழல்பவர்க்காகிவந்த
வள்ளமாய்ச்சார்ந்துளோர்கரு வயம்பின்றிநிமிர்நமின்ப
வெள்ளமாய்ப்பொலிந்துநின்றார் வேதநாதென்றியினின்றார் (14)

பழையவர்வைத்தசெல்வப் பாங்குளியல்புபார்த்தே
விழைவுடனயலுளோர்கள் வேண்டியுமாமிகந்த
வுழைவிழிமாதுதன்னை யுதவுவோமென்றபோது
மழைபொருதடக்கையண்ணல் மறுத்தனர்மனத்தையென்ப (15)

பற்றிலாவுளத்திற்றோன்றும் பாரம்போற்பழைமையாய்வந்
தற்றிடுமதிகாரத்தை யொருவியுஞ்சிலநாட்செல்லக்
கற்றுயர்மாட்சிதன்னாற் கவர்ணமெண்டாரோபப்
பெற்றனர்சேர்மனென்னும் பேர்பெறுமுத்தியோகம் (16)

வேறு.

கார்மனென்னநிதியிற்கருதறப்
பேர்மனென்னப்பொறையிற்பெரியவிற்
போர்மனென்னக்கருணையிற்பொன்னகர்ச்
சேர்மனென்னச் சிறந்தனரென்பவே (17)

புவனம்யாவும் புரந்திடுமன்னர்கோற்
றவர்கிலாது தனித்தனி தாங்கிய
சுவனமாவதிகாரத் துரைபலர்
நுவலையாகவியந்துரையாடுவார். (18)

ஆங்களாவியவர்களிருந்திடப்
பங்களாக்கள்பலபலகட்டிடங்
திங்களாமெனச்சிறொளிகாபலர்க்
கொங்களாவக்குயிற்றவரின்பமாய் (19)

தேயமேத்தியசீர்மைத்துரைகளி
னேயமேமிபரிதாகநிலையினுக
காயசித்தியோடன்புளகோக்கமாய்த்
தாயதன்மைகோரிலெனத்தோன்றினர் (20)

உண்மைதங்கியவுள்ளமுமேமேங்கருட்
கண்மைதங்கியகண்களுங்காவென
வண்மைதங்கியகைகளும்வாய்த்துறா
னுண்மைதங்கியமெய்யபுலனேணமையார் (21)

வம்புதோய்தனமங்கையர்கண்களாம்
அம்புதோய்கிலவாரறம்நீங்கினேர்
கும்புதோய்கிலகோபமுந்தோய்கில
சம்புதோய்ந்தருள் சற்குணநாதர்க்கே. (22)

அட்டுநீங்கல் பால்சுவையன்பர்கை
தொட்டுநீங்கலர் கற்புடைத்தோகையர்
கட்டுநீங்கலம்யாமெனுநன்பரை
விட்டுநீங்கலர் மேவிகழ்நாளெலாம். (23)

இரவியேறிபிறங்குப்பொழுதினிற்
பரவியேறப்புகழெனப்பல்கதி
விரவியேறுநல்வெண்ணிறம்பொங்கிய
புரவியேறியுலாவுவார்பொன்னகர் (24)

தேசமைந்தசிறுவரவ்வீதியிற்
கூசலாமனங்கொள்விளையாடலிற்
பேசுசெஞ்சொன்மழலையிற்போர்க்கொணு
ஆசைசென்றிடப்பார்ப்பரவர்களை (25)

சாந்தமென்னுந்தனிக்குணநற்கடல்
மாந்தராகிவயங்குவதென்னவே
ஆய்ந்தநீதியறிஞர்த்தழீஇநலம்
எய்ந்ததந்தையோ டின்புறவாழுநாள் (26)

வேறு

அங்கிலத்தரசர்மற்றுமுத்யோகராநங்கலைக்குடையாளர்கூடிச்
சங்கமாயுலகினன்மைமைபக்கருதுஞ்சபையினுக்குரியவராகப் (புங்
பொங்குதம்முளத்தின்மகிழ்த்துநன்மனுக்கள்போக்கியமங்கவராணுப்
திங்களினைர்கடிகத்துத்தரவேற்றுஞ்சிறப்புடனிருந்திடுங்காலம் ( )

மரபினர்தவமோதமர்பரிகவமோவளநகர்செய்திடுந்தவமோ (த்
வரவுநீர்க்கடல்சூழவனியைப்பரப்போரு வப்புறத்தள்ளுங்கேற்ற
திருவுளமகிழ்வாயிவ்வதிகாரஞ் செலுத்தினரொணகர்மாக்கள் (வார்
பரிவுடன்சேர்மன்வரும்பொழுசினிதாய்ப் பகர்ந்தகஃழவகையிற்படி

காலராய்மழையில்வளர்வகைப்போலுங்கதக்கடனெசிர்க்கரையா டுர், பாலராயிருந்தாரவர்சளாலடையப் பயனெகோகலைபெலாம்படிக்குந், தாலராயாருங்களிகொளப்போகுஞ்சாந்தராயாசர்களபுகழுஞ், சீலராய்விளங்குமின்னவர்போலே செல்வர்கள்வாய்ப்பரோவென்பார். (29)

பயனிகர்காமமகிசிசர்முகமமர்பூரணக்கருணைவீற்றிருக்க, மியல்புளவிழிபந்துவர்நிகர்வாயமிருண்டொழுகுந்சியுமடவார், மால்கொளவளருமிருபயவரையமற்றுளகேசெலார்பொருந்தச், சொல்புளையிந்தக்குரிசிலாலேறல்சிறக்குமென்றினிதெடுத்துரைப்பார். (30)

கௌவைநீர்க்கடல் சூழ்மாநிலக்கரியோர் கருமமேபுண்டிருந்திமஓ, நவ்வியம்மபலோடிருபகைதவிர்த்து ஞானமேகதிபெனப்பிடிக்தார், செவ்விசேர்பருவமுப்பதுக்குள்ளாய்த் தெளிவடைவதாமிஃதென், றவ்வையேயுரைத்தாளதிலக்காறு ரென்பர்நல்லறிவிளிற்சிறந்தோர். (31)

நீக்கமேபெருகிச்சிறந்திடுகதிபா னேர்ந்தகல்லேறலென் றுரைக்கும்
பூக்கமாமலரின் பொருட்டெழுதேன்போற் புண்ணியருறைந்திட
வையனூர், எத்தருதீநியப்பெருக்கினுக்குடையோ ரென்றவுத்தோ
கராய்ப்புவனம், காத்தவர்யாரும்வண்டுகளென்னக் கருதிவந்தினி
யனமொழிவார். (32)

ஆகப்படலம் 2. திருவிருத்தம் 76.

௩. சமாதிப்படலம்.

இன்னவாறிவராறு றுபுகழ்நகருக் கேறலாலேறலுன் றுளபேர்
சொன்னதுநலமென்றியயாவருமதிப்பச் சுகமுட னுறைந்திடுநாளில்
அன்னனாகனமேல்வருமொருதேவனமைத்தனைதவிலக்குணர்யாவர்
துன்னியதந்தோவருட்காலேழாய்ச் சொலலியவிறுதியாங்காலம்(1)

பஞ்சிடுமடியார்மபல்தவிர்த்துறை வோர்பதிட்டிரண்டெட்டினிற்ற
மக்குக், துஞ்சிடுங்கண்டமுளதெனத்தனது சோதிடக்குறிப்பினு
லறிந்தே, அஞ்சிடுமனமோடைம்புலனயர வறநெறிவழுவிலாநியற்
றில், உஞ்சிடுந்தகமையெய்தவுங்கூடு மெனறுதம்முள்ளத்திற்கொ
ண்டார். (2)

பங்குகூன்குருடு மிடியர்கள்யார்க்கும் பைம்பொனற்றுகிலனமீய்ந்
தும், பொங்கருட்டேவாலயங்களுக்கெல்லாம் பூசனையர்ச்சனைபல
வாய்த், தங்கபிடேகக்கட்டளைநடத்தித் தனித்தனிதீபதூபத்தோ,
டெங்கணுஞ்சிறக்கச்செய்தினிதேகித் திருவலமியல்புடன்புரிவார்.

விதுகதிர்சுழியாங்கலைபயில்யோகநிட்டையில்விளங்கியேயிருப்பர்
கதுவியவிழிநீர்பெருகவென்புருகக்கருத்தினில்விளங்கியபொருளை
மதுமலரெனவேசிறந்தழகிலங்கு மழைச்செழுங்கரங்களைக்கூப்பித்
துதிபலகூறியடைக்கலங்காப்பாய்சுத்தனேயென்றடிதொழுவார் ()

இல்லினைவெறுப்பர்பொருளினைவெறுப்பரெண்ணுவர்பல்விதங்கரு
ணைச், சொல்லினைவெறுக்கத்துணிந்திடாவள்ளல்தொன்முறைவந்
தருண்மறையைப்,புல்லினம்யாவர்பொறுப்பர்மற்றியார்க்கும்பொரு
ந்துறத்தாபிதஞ்செய்தோர், கல்லினைநிறுத்திற்சுற்றியேதீர்வர்கன்
மமென்றுருவிதந்துணிவார். (5)

பொருணயங்தெரிதேவாரம்வாய்மொழியும் புனிதமாய்த்தன்னிட
ம்பொரந்து, மருணையவோதியிரவியுமறைய பலரணைமீதினிலிறை
வன், அருணையந்தனையாய்த் துயில்வுறும்பொழுதி லருவுருவாகியுநி
றைந்த, கருணையங்கடலேதிருவுளமகிழ்ந்து கனவிடைத்தோன்றி
யதமமா. (6)

வேறு

காவியந்துகில்புனைகனகமேனியும்
மேவியகருணையே விளங்குநாட்டமும்
மாவியல்சடையுடன் மலருமாமுகத்
தேவசந்நியாசி போற்றிகழத்தோன்றியே. (7)

ஏற்றுளேனன்பநீயினிமையோடெனக்
காற்றியபூசைகளனைத்துமன்புடன்
மாற்றிடாத்தனிப்பதம் வழங்குவேன்பினை
நாற்றிசையுலகெலாநன்மையெய்தவே (8)

உற்றிடுமென்றனக்குள்ளதாகிய
நற்றொழிலினைக்கொடு நடத்தலெண்ணியுன்
பற்றுளதாயது பரிவோடாடியிற்
பெற்றிடும்பத்துநாற் பேர்கொள்நாளினில் (9)

வந்திடுவாயென மறைந்துபோயது
சுந்தரச்சோதியுந் தோன்றல்கண்விழித்
திந்திரசாலமொத் தியைந்ததோற்றந்தன்
சிந்தையிலுறவினை சிந்திப்பாரரோ. (10)

சூட்சியாய்க்கனவினிற் றோற்றங்கோலமெய்க்
காட்சியுநிகழ்த்திய கருமமும்பெறு
மாட்சியுநோக்கிடில் வந்தவன்பெருஞ்
சாட்சியாயுயிர்க்கெலாந் தலைவனாகுமால் (11)

சிற்பரநாதனாந் தெய்வங்கூறிய
வற்புதமொழியுயிர்க் குறுதியாயினும்
பிற்பயன்பயப்பதா யாரும்பெற்றிலா
நற்பயன்றவத்தினானண்ணலானதே. (12)

புன்சலதாரையிற் போனநீரினைக்
கொன்சலவாரிதி கொண்டதன்மைபோல்
வன்சலந்தூதையை வரம்பிலாவரு
ளின்சலவாரிதி பெற்றதேவாவெனு (13)

கண்ணலைச்சிலையெனப் பிடித்தகாமனைப்
பண்ணலைவலியெனப் பகர்ந்துநீக்கினோர்
இன்னலைத்துறந்தவ ரிருந்தகாலையிற்
றுன்னலைவரியிற் சுடருந்தோன்றவே (14)

ஊழமைசெயலென வொருவர்க்காயினும்
வழமைநீக்கினோ ரிசைககலாதுமெய்
யாழமையுடையதம் மன்பாதம்மிடந்
தோழமைபெரிதெனச் சொல்லினாரரோ. (15)

திருவுளமகிழ்வுடன் சேர்மன்கூறிய
பெருமிதவாய்மையைக் கேட்டபெற்றியோர்
வருமிதன்காரண மரணமாமெனப்
பொருமினர்விம்மினர்புகறலாயினார் (16)

சான்றவர்போற்றுறுந் தருமதேவதை
தோன்றுயர்மாண்பினைப் பொறுத்தவள்ளலே
வான்றனிபுகுவதற்காயவாறெனத்
தோன்றுதிக்கனவியல் பென்னச்சேர்ந்தனர் (17)

வருந்தியதோழர்தம் வருத்தமாறிடப்
பொருந்தியநீதியிற் புனிதபோதமெய்
மருந்தியல்பினிற் றிகழ்சிலவைப்பினிற்
றிருந்தியமொழிபல செப்பன்மேயினார் (18)

இருப்பதிங்கெவையெவ ரெண்ணில்கோடியாம்
உருப்பதிபொருளெலா மொழிதலுண்மையால்
திருப்பதிபலகிளைச் செல்வமாதியாம்
விருப்பதிலென்பயன் வீடுசல்குமோ. (19)

சுற்பரன்படைத்திடுந் தரணியோர்புனற்
புற்புதநிலையினிற் பொன்றுவாரலாற்
கற்பங்களெனைப்பல கண்டுவைகிய
விற்பனர்யாவரே விவேகவாய்மையிர். (20)

கரணமொன்றறிஞர் கருதாப்பொருள்
திரணமென்றயர் தவஞ்செய்துவைகநல்
லரணமென்றிறையடி யடைவர்யாமெலா
மரணமென்றொரு வெல்லைகடக்கவலமோ. (21)

பட்டினத்தடிபுவி படியுமாசையைக்
கட்டினபோதமெய்த் தாயுமானவர்
கிட்டினர்பரனடி யென்னக்கேட்டியாங்
கட்டினவிற்பொருள் கருதலாகுமோ (22)

துயில்வருங்கனவினிற் றோன்றுஞ்சோதியே
யியல்புடன்கூறிய வினியவாய்மையிற்
பயிலுமிப்பிறவியிற் பயன்படைத்ததோர்
செயலெனவென்மனந் தெளியலானதே. (23)

கனவருண்மொழியுமென் னையதாய்விடின்
இனமுதல்யாவர்க்கு மின்பமாகுமால்
மனநிலையெற்குநீர் வருந்தலீரெனச்
சனகனைப்பொருவுவார் சாற்றினரோ. (24)

எண்ணியசெயலிஃ தீசன்கற்பனை
நண்ணியதெனமனத் தடக்கிநாடொறுங்
கண்ணியரவருடன் கலந்திருந்துழிப்
புண்ணியவத்தினம பொருந்தலானதே. (25)

வேறு.

தாலகாவலராய்விளங்கியநமது தருமவாங்கிலத்தவராசு (த
ஏலகாருணியம்பெருகுமாயிரத்துத் தொளாயிரத்தெட்டினிலியைந்
கிலகாவருடமாடியாமதியிற் கிளர்பதின்சதுரநாளலனு
கூலகாலங்காண்குருமுவாவாரங்கூடுசெவ்வாய்ப்பகலிடையில் (26)

கருதியமனத்திலருவருப்புளதாய்க் காதலடைத்தோங்கரிப்புடனே,
குருமணியனையமேனிப்புலவியர்க்கக் கூடியமயக்கினிலயர்வாய், மரு
மலரணையிற்சாய்ந்தப்பூவலைதுயலாமெனலாம்பரவியவொளியை, இரு
தயவெளியிலாம்படி கண்ணித வெண்ணிநன்மோனமோடிருந்தார். ()

காதையுந்தமதுதோழருமபிறருந்தகைவுடனிருபுறநெருங்கி [லும்
வேதைகள் தீர்தற்காஞ்செயலைபாவும வேணதாய்ச்செய்துபார்த்தத
போதையேதவிசாயுகந்தவன்விதியாற்பொருந்துதலின் றிநன்றுசிற்
சீதையின்கணவனெட்டெழுத்தே திச்சிருயிரடங்கனவெண்ப (27)

சடங்கிளர்பேதநன்மைகண்டறியத்தகுங்கலைமருத்துவர் திகைக்க
இடங்கிளர்புனனோக்கினை கருந்தயங்கவின் னுயிர்த்தோழருமயங்க
தொடங்கியதவத்துத்தந்தையுங்கலங்கத்துணைவியர் துணைவர்களு
யர, அடங்கியதந்தோநல்லுயிரதுதானமலனன்றுரைத்த சொற்ப
டிக்கே. (28)

வேறு.

பேதமிலாஞானபரப்பிரமநிலைச்சாரூபம்பெற்றுநின்ற
மாவராஞ்சேர்துரைதனைநோக்கிமனதழலவழியக்கண்ணீர்
காதல்புனைதோழர்கிளையோர்துணைவர்மற்றவருங்கலங்கியேங்க
வோதரியநல்லறஞ்செய்தின்றமிதாபடுதுயர்நாமுரைக்கலாமோ ()

தலம்விளக்குஞ்சேர்மனுந்தனித்துரையேதயாநிலையேதக்க சா
ன்றோர், குலம்விளக்குமாமணியே குறைவுபடாநற்சுடரே குன்று
நீதி, நலம்விளக்குமாதவமே நன்னுபிணிக்கோர்மருந்தேநயக்குண
மை, புலம்விளக்குமபேரருளேகொடையளிக்குங்கற்பகமேபொன்
னே கண்ணே. (30)

கலியாணந்தனைமுடித்துக்கண்குளிரப்பாராமற்கருதுஞான
வலியாலேதவிர்த்தமறுமன்னரெலாம்புகழ்பதிக்கவாழ்வுபெற்று
யொலியாழிசூழ்புவியிற்சேர்மனதுதந்தையெனவுயர்வுபெற்றும்
பலியாமலின்றுதின்மாண்டனையேயானிருக்கிற்பயன்றானென்னே

கலைநிறந்துமதிவதனக்காதல்நின்றுயிரத்தல்கண்டுநீயே, நிலைநிறு
த்துவாய்மரபைபென்றொரு பெண்தேடாமனின்றேன்மேனுன், ம
லைநிறுத்திக்கடல்கடைந்தவெம்பெருமான்சேவடியைமறவாதுள்ள
த், தலைநிறுத்திவான்புகுந்தாய்சஞ்சலத்தில்யான்புகுந்தேன் தக்க
தாமோ. (32)

சுவர்க்காதிபோகமெல்லாந்தாய்த்தாலு மென்னையன்சொன்னவாய்
தவிர்க்காதகன்மகனைப்பெற்றோருக்கீடிலையாந்தரித்தபூணை (மை
லவிர்க்காதின்மாதர்மணமல்லாதிங்கென்மொழியையணுவுந்தப்பா
யிவர்க்காதிமன்னரிணையென்றுலகோர்பேசமதிப்பியந்தகோவே. ()

என்றருகினின்றவர்கணீர்ததும்பவெவ்வுயிருமிரங்கிப்பொங்கி
நின்றாருகப்பார்த்தனனெடுநேரம்புலம்பியயர்நிலையிலாக
துன்றியநற்றோழர்களும்பின்னவருமன்னதுபோற்றுளங்கிவிம்மக்
கன்றியழாதேவர்கடாங்கடிகரிலுள்ளவரைக்கருதுங்காலை (34)

நிரையாழிங்காதலத்தார்திருவுடலைச்சூழ்ந்தழுவார்நிறைவென்றோ
தும், இரையாழிதனிலெடுத்தங்கிடராழிப் பட்டெவருமேங்கிநை
யத், திரையாழியணைபொருநைநீராட்டி நறுங்கலவைச்சேறுசாத்
தித், தரையாழிதனின்மரபோர் செயுமுறையேதக்கபடி சமையச்
செய்தார். (35)

பூஞ்சிவிகைமீதேற்றிப் பொன்னகரமாந்தர்களும் புவனங்காக்கும்,
வாஞ்சைதிகழ்துரையரசர்மற்றோருமதிமயங்கவாரியோசை, தேஞ்
சதெனப்பல்வகையாமிய மொலிக்கச்சங்கொலியுந் திகாந்தமுட்ட,
மாஞ்சகுறிதோற்றது வருங்கோலம்பார்த்தெவருமெ வருந்திச்சொ
ல்வார் (36)

பெரியகுடித்தனமரபோர்பிள்ளையினுக்கிவ்விதியோவந்தோவந்தோ
கரியகுழனமாதினமணையிவ்வயதிற்காண்கிலரேயந்தோவந்தோ
வுரியதிருத்தாயிருக்கிலுறுதுயரையாருரைப்பாரந்தோவந்தோ
எரியுமுளத்தந்தைதுயராற்றுவதாரிப்புவியிலந்தோவந்தோ (37)

பார்த்தாரேயேழைகளைப் பலபொருளுந்தந்தாரே யந்தோவந்தோ
தீர்த்தாரேநோய்விடங்கள் செழுமபுனலான்மந்திரத்தா லந்தோவ
ந்தோ, வேர்த்தாரேயின்றுதினஞ்சென்றாரேவிண்ணுலகிலந்தோவ
ந்தோ, போர்த்தாரேவெந்துயரையாமெல்லாம்பொறுத்தேங்கவந்
தோவந்தோ. (38)

பார்பொறுக்குமாநிதியத் திரளிருந்துமழகிருந்தும் பழமையான
ஊர்பொறுக்குஞ்சேர்மனெனு முத்யோகம்பெற்றிருந்து முலகோர்
மெச்ச, வார்பொறுக்குந்தனமகளிர் திருமணங்கண்டறியதிருமகவா
ல்வாய்க்கும், பேர்பொறுக்குந்தகைமையிலா தாயினதுமுன்னோர்
செய்பிழையோவென்பார். (39)

உண்ணீரைக்கண்டதெனை யாமுவக்கத்தெருவிலழகோங்கச்சென்
றோர், தண்ணீரைநீத்திடுமீன்றன்மையுறச்சிவிகையினமேற்சார்வ
தானார், கண்ணீரைவிட்டுருகிதேதேம்பியழுந்தந்தையிவர்கடைநாட்
சிந்துப், எண்ணீரையேற்குமொருநற்றவமுஞ்செய்திலரேயென்று
ழைவார் (40)

என்னதவஞ்செய்தாரோ விவன்றனைதயின்னவனைப்பெறவேயென்
று, மன்னரெலாம்புகழ்ந்து மணியாசனந்தந்துபசரித்து மகிழ்ந்து
பேசுவ, நன்னயஞ்சேர்திருமகனைப் பெற்றிருந்துமவர்தனக்கேநா
டிச்செய்யும், பன்னரியநற்கிரியை யிவனவருக்கேபுரியப் பணித்த
தெனபார். (41)

பிரசநறும்பூவினைவிட் டகலாதவண்டினம்போற் பிரியாத்தோழர்
சரசமொழிதந்திருக்கப் பொற்பீடமீதிருப்பார் தகுதிபெற்ற
பரசமயம்யாவுமொருநிலையெனவேபாவிப்பார்பதிவுபெற்ற
அரசர்திருச்சங்கமும்விட்டமரர்திருச்சங்கமதையடுத்தாரென்பார்

பெற்றோருக்கருந்தவமாய்ப் பெருநகருக்கோராசாய்ப் பிணியாற்று
னப, முற்றோருக்கோர்மருந்தாயுதயோகர்க்கோரமைச்சாயுயர்ந்த
கல்வி, கற்றோருக்கொருதுணையாய்க்கருணைக்கோரிருப்பிடமாய்க்க
லந்தபாச, மற்றோருக்காதரவாய் நின்றோரும்போயினரேயந்தோ
வென்பார். (43)

என்னநகராடவருமாதர்களும்பாலர்களுமிரங்கியேங்க
அன்னைமுலைப்பாலுகர்தலின்றியினஞ்சேய்களுறவருமையாசப்
பன்னுதொழிலயர்புரிவாருதயோகத்துளோகளெல்லாம்பரிந்துவாட
மன்னனிராமன்கானம்புகவயர்வயோத்தியினைமானதேறல் (44)

வாட்டமிகவாதனிமாநகரைநீங்கியுவர்க்கடலின்மாநீர்
ஓட்டமிகவாதகதியோங்குகரைப்பாங்குகுழியொன்றதொட்டே
நாட்டமிகவாதபுனற்றனையிறைக்கடன்முறைகணல்கிவந்த
ஈட்டமிகவாதபடிபூட்டுமணிப்பெட்டகத்துளுடலையிட்டார் (45)

விற்படியுந்திருவணிகள்கழற்றுதவிரும்பியவர்படித்தஞானச்
சொற்படியும்புத்தகமுந்தன்னிமடிமீதிருக்கத்தொடருமாசை
யற்படியுப்பேதமையோர்தேறவொணுமெய்யமலபோதமான
எற்படியுஞ்சிரதையராயாங்கிருக்கநல்லடக்கமியற்றிப்போனார் (46)

திரைநதிநீராடிநகர்சென்றாக மதிற்பருங்கார்சேணின்மீது, விரைக ணகத்தேசருக்கனன்னவர்போல்வேலையிடைப்புக்கானங்கே, வரை முலையார்மைந்தரொண்புள்ளினமுமலர்க்காவிலொடுங்கினகைக், து ரையரசர்முகங்களெனத்தாமரைகளிதழ்குவிந்துதோன்றிற்றம்மா

ஊழைமுயாற்கொள்ளுமுணவின்றிநகர்மாந்தர்துயர்மூழ்கிவாட மாழைமுதற்பொருளிருந்தென்னபயனென்று பிதாவருந்தச்சே ர்மன், ஊழையேகொண்டினிச்செய்சித்துவிளையாடலதினுண்மை யெண்ணு. ஏழையோர்தம்முளம்போற்பகிரண்டகோடியெலாமிரு ண்டமாதோ. (48)

ஆகப்படலம் ௪-க்கு திருவிருத்தம் 124.

௪. அற்புதங்காட்டுப்படலம்.

வேறு.

அன்னதாகியவிருளிடையையனிலுடலிற்
றன்னுமாமணிப்பணியுடன்றுகில்களைக்கவர
வுன்னிச்சென்றனரொழுக்கெலாந்தவிர்த்திடுங்களவைத்
தன்னதாமெனப்புரிந்துழல்வஞ்சகச்சழக்கர். (1)

சேய்கள்போலவுங்கனிமொழியினியனசெப்பி
நோய்கள்போலவும்வருந்துறப்பொருள்கவர்நொய்யர்
பேய்கள்போலவும்பேரிருட்பிழம்பினிற்றிரியும்
நாய்கள்போலவுநோக்கினர்நடந்தனர்விரைந்தே. (2)

ஏகநாயகன்கருணையையறிவினிலேற்று
நாகநாயகர்வியப்புறநாடியவாகி
யோகநாயகராகியேயுயர்பெறுஞானப்
போகநாயகருறைந்திடுமத்தலம்புகுந்தார். (3)

ஆண்டுசென்றவராருயிர்மறலியூரடையத்
தூண்டுநோய்பலதொலைத்திடுமுத்திரைத்தூய்மை
பூண்டுவைகுசமாதியைப்பொருந்திபேதையாற்
றீண்டுங்காலையினாகங்களெழுந்தனசீறி. (4)

பணிகட்காகவேகொட்டிடப்பணிகளேயெழுந்து
தணிவிற்சிற்றமோடவர்களைத்துரத்திடத்தயங்கித்
துணியுமெய்ப்பொருளரிதிருமார்பிடைத்துலங்கு
மணியைநாடியவரக்கராம்வலியரைப்போன்றார். (5)

எவ்வமாற்றிடுந்தெய்வநன்னிலையினிலியைந்தோர்
செவ்வியாந்துகிலணிகளைத்தீயவக்கள்வர்
வவ்வுந்தன்மையதாகுமோவலியுடனெழும
வெவ்வராகிலைதெரிந்தினிவிரிப்பவர்யாரோ. (6)

நஞ்சுபோன்றவர்நஞ்சுடைநாகத்தினலிவால்
அஞ்சியோடினரவர்களைப்பிடித்திடும்படிகண்
டுஞ்சுமாந்தரைக்கூவிநின்றழைப்பதுதோன்ற
மிஞ்சிவாரணங்கூவிடவிடிந்ததவ்வேலை (7)

கணிதமிஞ்சியஞானமேகதியெனக்கண்டோர்
துணியிலெவ்வகைநிலையினுந்துலங்குவரவராய்த்
தணிவிலன்புடனிருப்பவர்தாள்சிரந்தரித்தோர்
பிணிகள்பேர்ந்தெனப்பேரிருள்பேர்ந்தெனபெரிதே. (8)

